-131-

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சி பிரிவு)
கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி ) அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை :- திரு.தி. ராஜசேகர், எம்.டெக். எம்.பி.ஏ ,

செ.மு.ஆ.எண்.18969/பஅ3/2018 நாள். 16.06.2021

பொருள் பணியமைப்பு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை – வேலைவாய்ப்பு பிரிவு – அரக்கோணம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உதவி பயிற்சி அலுவலராக பணிபுரிந்து பணியிடை மறைந்த திரு.பி.லோகு அவர்களின் வாரிசுதாரர் திருமதி.எம்.சரிதா அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கியது – பணிவரன்முறை செய்ய அரசாணை மற்றும் வழிமுறைகளை பின்பற்ற கோரியமை – பணிவரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடுதல் – தொடர்பாக

பார்வை 1) அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ) துறை நாள் 02.03.2016
2) இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி) அவர்களது செயல்முறை ஆணை எண்.18969/பஅ3/2018, நாள் 18.01.2019
3) உதவி இயக்குநர் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம் திருவள்ளுர் அவர்களின் கடித எண்.41/அ/2019, நாள் 21.02.2019
4)கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி) அவர்களது செயல்முறை ஆணை எண்.18969/பஅ3/2018, நாள் 27.11.2020
5) இயக்குநர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அவர்களின் கடித எண்.18969/பஅ3/2018, நாள் 30.12.2020
6)அரசாணை (நிலை) எண.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள் 26.02.2021
7)அரசுக் கடிதம் எண்.359/ப்பி2/2021–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 15.03.2021

<<>>

ஆணை :-

பார்வை (2) ல் காணும் இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி) அவர்களது செயல்முறை ஆணையின் மூலம் திருமதி.எம்.சரிதா அவர்களுக்கு திருவள்ளுர் மாவட்ட திறன் பயிற்சி அலுவலத்தில் தற்காலிக இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி நியமனம் செய்யப்பட்டு, பார்வை (3) ல் காணும் கடிதத்தின் படி திருவள்ளுர் மாவட்ட திறன் பயிற்சி அலுவலத்தில் இவர் **07.02.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக** பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (1)ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசுப் பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்துவதில் தெரிவிக்கப்பட்ட தெளிவுரையினைத் தொடர்ந்து, பார்வை (6)ல் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை பத்தி 5ல் (5.1), (5.2) மற்றும் (5.3.)ன் வழிமுறைகளின்படி (Guidelines) பரிசீலிக்கும் நேர்வில் , **திருமதி.எம்.சரிதா அவர்கள் இளநிலை**

உதவியாளராக 07.02.2019 ல் பணியில் சேர்ந்துள்ளதாலும், எந்தவித விதித்தளர்வுமின்றி பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளதாலும், திருமதி.எம்.சரிதா , இளநிலை உதவியாளர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலம், திருவள்ளூர் அவர்களின் இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 07.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இச்செயல்முறை ஆணையினை பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இத்துடன் பத்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ்கள் அசலாக அனுப்பி வைக்கப்படுகிறது. இச்செயல்முறை ஆணை மற்றும் பத்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ்கள் ஆகியன பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினையும் மற்றும் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட விவரத்தையும் உடன் அளிக்கப்பட வேண்டும்.

ஒப்பம் /– தி.ராஜசேகர்
கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி)

பெறுநர்
திருமதி.எம்.சரிதா,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட திறன் பயிற்சி அலுவலம்
திருவள்ளூர் – உரிய வழியாக

நகல்
1) உதவி இயக்குநர்,
மாவட்ட திறன் பயிற்சி அலுவலம்
திருவள்ளூர்
2) மண்டல பயிற்சி இணை இயக்குநர்,
சென்னை.

3) இருப்புக் கோப்பு

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

21/6/21

கூடுதல் இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி)– க்காக

21/6/21

மே.ரு. ஆணை எண்: 18969/பஅ3/2018
நாள்: 16.06.2021

மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்
திருவள்ளூர் - 602001.

Recd.
24/06/21

உரியவருக்கு வழங்கப்படுகின்றது.

24/06/21

உதவி இயக்குநர்
மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்
திருவள்ளூர்-602 001.